**OS.No.70/2022 P.W.1-மஞ்சுளா 10.04.2026**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியும். வழக்கு சொத்தை யார் அனுபவித்து வருகிறார்கள் என்றால் பாலவாக்கம் பெரியார் தெருவிலுள்ள வீட்டை எனது பெரிய அண்ணன் விஜயகுமார் என்பவர் அனுபவித்து வருகிறார். நீலாங்கரை, சரஸ்வதி நகரிலுள்ள இடம், வீடு ஆகியவற்றை எனது 2வது அண்ணன் இளங்கோவன் அனுபவித்து வருகிறார். கூடுவாஞ்சேரி, கன்னிவாக்கத்தில் உள்ள சொத்திற்காக பத்திரம் என் பெரிய அண்ணன் விஜயகுமார் வசம் உள்ளது. நான் திருமணம் ஆன காலம் முதல் பாலவாக்கத்தில் வசித்து வருகிறேன் என்றால் திருமணம் ஆன பிறகு தியாகராயநகரிலும், அதன் பின்பு பாலவாக்கத்திலும் வசித்து வருகிறேன். என் தகப்பனார் எந்த ஆண்டு காலமானார் என்றால் 07.02.2007 அன்று காலமானார். என் தகப்பனார் இறந்த 14 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)